ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1856/5 - 2014 මාර්තු මස 31 වැනි සඳුදා - 2014.03.31

1856/5 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/1978 (xii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சேலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 2010 ஆம் ஆண்டு யூன் 17 ஆந் திகதிய 1658/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் தொடர்பில் ஆக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, அதற்கான அட்டவணையில், "பீடம்" என்ற தலைப்பின் கீழ் நிரல் I இல் காணப்படுகின்ற "விவசாயப் பீடம்" என்ற பதிவுக்கும் மற்றும் அதற்கு நேரொத்ததாகவுள்ள "துறை" என்ற தலைப்பின் கீழ் நிரல் II இல் காணப்படுகின்ற பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| விவசாயப் பீடம் | 1. விலங்கு மற்றும் உணவு விஞ்ஞானங்கள் துறை |
| | 2. விவசாயப் பொறியியல் மற்றும் மண் விஞ்ஞானத்துறை |
| | 3. விவசாய முறைமைகள் துறை |
| | 4. தாவர விஞ்ஞானங்கள் துறை.". |

திசாநாயக்க முதியான்சேலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2014, மாச்சு 27.

4 - 414



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.